JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**(A1-Muhammad Taj Maideen, S/o.Saiyadu Sarbudeen is absent, For A1, petition U/s.317 Cr.P.C. filed and allowed. A2-Alavudeen Basha, S/o.Saiyadu Sarbudeen is already split up from this case.)**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 19.04.2023

**CC.No.11/2014 Name:Loganathan S/o.Muthusamygounder PW3**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.3 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)நான் வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது எனக்கு சொந்தமான டிவிஎஸ் அக்ஸஸ் வண்டியின் பதிவு சான்றிதழை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வண்டி காணாமல் போனதற்கு அடுத்த நாள் போலிசார் என்னை கூப்பிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வரும்படி சொன்னதன்பேரில் நான் அன்றைய தினம் காலை 7 மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் இல்லை. 9 மணிக்கு சென்றேன். நான் காவல் நிலையம் வண்டி அங்கிருந்தது என்றால் சிரதான். அதேபோல் வண்டியை திருடி சென்றதாக கூறும் நபர்கள் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை.

2)காவல் நிலையத்தில் நான் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் அரை மணி நேரம் இருந்திருப்பேன். அப்போது காவல் நிலையத்தில் வண்டி காணாமல் போனது கிடைத்தது சம்பந்தமாக ஒரு பேப்பரில் எழுதினார்கள் என்றால் சரிதான். அந்த பேப்பரில நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த கையொப்பம் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.5 புகாரில் செய்த கையொப்பம் ஆகும். சாட்சிகளான சுரேஷ்குமார், கார்த்தி, சரவணன், பாலாஜி, பிரபாகரன், மகேஸ் ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் சரிதான்.

3)நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் வண்டி கிடைத்திருப்பதாக எனக்கு போலிசார் தகவல் சொல்லி வரச்சொன்ன தினத்தன்று காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். அப்போது மேற்படி சாடசிகள் அனைவரையும் போலிசார்

விசாரித்து சாட்சி கையொப்பம் வாங்கினார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து சென்னிமலை ரோடு சுமார் அரை கி.மீ.தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

4)வண்டி காணாமல் போனதற்கு முன்பாக பயன்படுத்தி வந்த சாவியைதான் நான் தற்போதும் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எனது வண்டியை எனன்னிடம் காண்பிக்கும்போது என்னையும், வண்டியையும் போலிசார் புகைப்படம் எடுத்தார்கள் என்றால் சரிதான். வண்டியை எடுத்து சென்றவர்களை போலிசார் பிடித்துவிட்டதாக என்னிடம் போலிசார் தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான். அவர்களை காவல் நிலையத்தில் வைத்திருப்பதாக என்னிடம் விபரம் சொன்னார்கள் என்றால் சரிதான்.

5)சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தின் அருகே உள்ள கடைகளில் சிசிடிவி கேமரா வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது இந்த சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்தார்கள் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் வண்டியை திரும்ப பெற்றுச்செல்லும்போதுதான் எனது வண்டியின் அசல் பதிவு சான்றிதழை காண்பித்து பெற்றுச்சென்றேன் என்றால் சரிதான். வண்டி காணாமல் போனதாக சொல்வது தவறு என்றும், அது கிடைத்துவிட்டதாக சொல்வது தவறு என்று என்றால் சரியல்ல. புகாரை நான்தான் எழுதினேன். எனக்கு ஏற்கனவே காவல் நிலையத்தில் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோர்கள் பழக்கம் என்றால் சரியல்ல. நான் பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.